# தேவன் விரும்பும் பூரண வாழ்க்கை

- இயேசு கிறிஸ்துவோடு கூட எப்போதும் நெருங்கிய ஐக்கியம் உள்ளவர்களாக, தொடர்புள்ளவர்களாக வாழ வேண்டும்.
- இயேசுவை பிரியப்படுத்த நான் விரும்புகிறதினாலே அவருக்கு பணிவிடை செய்வது குறித்து மகிழ்ச்சியடைகிறேன் என்பவர்களாய் செயல்பட வேண்டும்.
- நாம் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டும். (1 தெசலோனிக்கேயர் 4:3) நமது எண்ணங்களில் தூய்மை காணப்பட வேண்டும். (பிலிப்பியர் 4:8)
- எப்போதும் சந்தோஷமாக இருக்க வேண்டும். (1 தெசலோனிக்கேயர் 5:16)
- நாம் விசுவாசத்தினாலே அனுதினமும் வாழ வேண்டும்.
- நம்முடைய வாழ்க்கையின் மூலம் கிறிஸ்து வாழ வேண்டும்
- ஒவ்வொரு நிமிடமும் பரிசுத்த ஆவியானவரின் பெலனை பெற்று நாம் நடக்க வேண்டும்.
- தேவன் முதிர்ச்சியை கொண்டுவர பலவித சோதனைகள், உபத்திரவங்கள், பாடுகளை அனுமதிக்கிறார். (1 பேதுரு 1:3–6)
    - அன்பு நம்மை நிறைவுற்றவர்களாய் பூரணராய் மாற்றுகிறது. (1 கொரிந்தியர் 13:10)
    - பொறுமை நிறையுள்ளவர்களாய் பூரணராய் மாற்றும் (யாக்கோபு 1:4)
    - உண்மையுள்ளவராயிருப்பது பரிபூரண ஆசீர்வாதங்களை கொண்டு வரும் (நீதிமொழிகள் 28:20)
    - எந்த அளவிற்கு நாம் உள்ளத்தில் உணர்ந்து தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம் (ஸ்தோத்தரிக்கிறோம்) என்பது கிறிஸ்துவோடு நாம் நெருங்கி வாழ்வதற்கு அளவுகோல் (எபேசியர் 5:4)

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

# பரிபூரண கிறிஸ்தவன்







இவ்வுலக வாழ்வில் யாருமே பரிபூரண கிறிஸ்தவர்களாக வாழ முடியாது, எந்த ஒரு விசுவாசியும் பரிபூரணமானவர் அல்ல.

பாவம் செய்யாத மனிதன் இல்லை. 2 நாளா 6:36, ரோம 3:23, சங் 14:3, 1 யோவ 1:8,10

இரட்சிக்கப்பட்டவனும் பாவம் செய்வான் ஆனால் தொடர்ந்து பாவத்தில் நிலைத்திருக்க மாட்டான்.

இரட்சிக்கப்பட்டவன் அனுதினமும் கழுவப்பட வேண்டும்.

கர்த்தர் கற்பித்த ஜெபத்தில் எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும்.

**தங்கத்திலே மாசுக்கள் கலந்திருப்பதால் அது மதிபற்றதாகி விடுமா ?**

தேவன் நீடிய பொறுமையாக இருப்பதால் எதுவும் காலதாமதமாகிவிடாது அனைத்தும் அவரது நேரத்தில் சிறப்பாக நடக்கும்.

நமது அவசரப்படுதல்கள் அவசியமற்றவை எரே 15:15

மனிதர் எப்போதும் குறைபாடுடையவர்கள்

- ஆபிரகாம் – குழந்தை விசயத்தில் தடுமாறியதுண்டு. ஆதி 17:17
- மோசே – பெருமையுடன் நடந்து தவறியதுண்டு. எண் 20:10

வேதாகமம்
நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

இரட்சிப்பு

- தாவீது – விபச்சாரத்தில் தடுக்கி வீழ்ந்ததுண்டு. 2 சாமு 12:9
- பேதுரு – வாய் குழறி கர்த்தரையே மறுதலித்துண்டு.
- பவுல் – கோபத்தில் கட்டுப்பாட்டை இழந்ததுண்டு. அப் 23:3

ஒரு மனிதன் பல தவறுகளை உடையவனாக இருந்தும் மெய் கிறிஸ்தவனாக இருக்கலாம். எ.கா. லோத்து 2 பேது 2:8, ஆதி 19:16

வேதாகமம்
இரட்சிப்பு
நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்